## அண்ணல் அம்பேத்கர் எந்த இலட்சியத்திற்காக உழைத்தாரோ,

# அந்த இலட்சியத்தை அடைய, நாம் ஓரணியில் நின்று உறுதியோடு பயணிப்போம்!

## சென்னையில் நடைபெற்ற ‘சமத்துவ நாள்’ விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

சென்னை,ஏப்.15-

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் `சமத்துவ நாள்’ விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிகு உரையாற்றினார்.**

அப்போது அவர், ``அண்ணல் அம்பேத்கரின் வழியில் அயராது உழைப்போம். எல்லா நாளையும் சமத்துவ நாளாகப் போற்றுவோம், புரட்சியாளர் அம்பேத்கரின் லட்சியங்களை வென்றெடுப்போம்” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிகு உரை வருமாறு:

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகளை நியமனப் பதவிகளில் வருகின்ற ஆளுநர்கள், இனி எந்நாளும் பறிக்க முடியாது என்ற மகத்தான தீர்ப்பை இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் பெற்றுத் தந்த நம் `மாநில சுயாட்சியின் நாயகர்’ முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சமத்துவ நாள்

அண்ணல் அம்பேத்கரின் குடும்ப வாரிசாக மட்டுமின்றி, அவரின் கொள்கை வாரிசாகவும் திகழ்கின்ற பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதை மிகுந்த மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் கருதுகிறேன். தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூகநீதி நாள் என்றும், அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாள் என்றும் இந்தியாவிலேயே கொண்டாடுகின்ற ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டும் தான். தலைவர்களைக் கொண்டாடுகின்ற அதேவேளையில், அவர்களின் கொள்கைகளை அடுத்தடுத்த தலைமுறைக்கும் நாம் கொண்டு சேர்க்க வேண்டும். அதை மனதில் வைத்துத்தான் நம் முதலமைச்சர் அவர்கள், அயராது உழைத்து வருகிறார், பல திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

### விடுதிக் கட்டட திறப்பு விழா

ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து அப்போதைய சென்னை மாகாண சட்டமன்றத்திற்குள் சென்ற முதல் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.ராஜா அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களை ஆதிதிராவிடர் என்று அழைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவரும் அவர்தான். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த எம்.சி.ராஜா அவர்களின் பெயரில் இன்று நவீன கல்லூரி மாணவர் விடுதிக் கட்டட திறப்பு விழா நடந்து இருக்கிறது.



சுமார் 228 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிகள், கல்லூரி விடுதிகள், சமூக நலக்கூடங்கள் கட்டடங்களை நம் முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்திருக்கிறார். பழங்குடியினர் ஆயிரம் பேருக்குக் குடியிருப்புகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, பட்டியல் பழங்குடிச் சமூகப் பயனாளிகள் 50,000 பேருக்கு 301 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை, முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களைக் கைதூக்கி விட வேண்டும். இதுதான் நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஒரே இலட்சியம். இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது 9.69 சதவிகிதமாக இந்தியாவிலேயே முதலிடத்திற்கு வந்துள்ளது.

‘எல்லோருக்கும் எல்லாம்’ என எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்கின்ற கழக அரசின் திட்டங்கள்தான் இந்த வளர்ச்சிக்கு ஒரே காரணம். ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களைக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னேற்ற வேண்டும். சமூக அடக்குமுறைகளில் இருந்து, அவர்களை நாம் காப்பாற்ற வேண்டும். வன்கொடுமைகளை தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கான, உறுதியான நடவடிக்கைகளை நம் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

### இதற்கு பெயர்தான் சமூகநீதி

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தங்கை அரியலூர் அனிதா நீட் தேர்வினால் 2017ஆம் ஆண்டு உயிரிழுந்தது நம் அனைவருக்கும் தெரியும். நீட் ஒழிப்பே அனிதாவின் மரணத்திற்கான நீதி. எனவேதான், நீட்டிற்கு எதிரான சட்டப்போராட்டத்தை நம் அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. அன்றைக்கு மருத்துவக் கல்லூரிக்குள் நுழைய தங்கை அனிதாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அனிதா பிறந்த அதே அரியலூரில் மருத்துவக் கல்லூரி அரங்கத்திற்கு அனிதாவின் பெயரைச் சூட்டி அழகு பார்த்தது நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள். இதற்கு பெயர்தான் சமூகநீதி.

இந்த உணர்வு நம் உள்ளங்களில் இருக்கின்ற வரை தமிழ்நாட்டை யாராலும் பிரித்தாள முடியாது. ஆனால், நம்மைப் பிரித்தாளுகின்ற முயற்சிகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடந்துகொண்டு இருக்கின்றன. அந்த சூழ்ச்சிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும், முறியடிக்க வேண்டும். அதற்கு தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பார்வை நம் அனைவருக்கும் வேண்டும். அதற்காகத்தான் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை இன்றைக்கு சமத்துவ நாளாக கொண்டாடுகின்றோம்.

### பொருளாதார விடுதலை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அண்ணல் அம்பேத்கரின் பெயரைச் சூட்டி அழகு பார்த்தார். அம்பேத்கருக்கு சென்னையில் மணி மண்டபம் கட்டியதும் நம் கலைஞர் அவர்கள் தான். இன்றைக்கு கலைஞர் வழியில் அம்பேத்கரின் இலட்சியங்களை உயர்த்திப் பிடித்துக்கொண்டு இருப்பவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். பட்டியல், பழங்குடி மக்கள் சமூக ரீதியாக விடுதலை பெற வேண்டும். அதுமட்டுமல்ல, பொருளாதார விடுதலையையும் அவர்கள் அடைய வேண்டும். அதற்காகத்தான் ‘அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’ போன்ற திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

பட்டியல், பழங்குடி மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது நம் அரசு. அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் இன்றைக்கு நடந்து இருக்கின்ற இந்த நிகழ்ச்சி. ஆகவே, அண்ணல் அம்பேத்கர் எந்த இலட்சியத்திற்காக உழைத்தார்களோ, அந்த இலட்சியத்தை அடைவதற்கு நாம் அனைவரும் ஓரணியில் நின்று உறுதியோடு பயணிப்போம்.

நலத்திட்டங்களை பெற வந்துள்ள அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணல் அம்பேத்கர் புகழ் ஓங்கட்டும். இன்று மட்டுமல்ல, எல்லா நாளும் சமத்துவ நாளாக அமையட்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### தனியார் மூலமாக ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீடு குறைவு:

# சவுதி அரசுடன் பேசி தீர்வு காண்க!

### ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.15-

இந்தியாவில் இருந்து தனியார் நிறுவனங்கள் மூலம் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கான ஒதுக்கீடு திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது. உடனடியாக ஒன்றிய அரசு சவுதி அரசுடன் பேசி விரைவில் தீர்வு காண வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**இந்தியாவில் இருந்து தனியார் நிறுவனங்கள் மூலமாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கான ஒதுக்கீடு திடீரெனக் குறைக்கப் பட்டிருப்பது பல்லாயிரக்கணக்கானோரைப் பரிதவிப்பில் ஆழ்த்தியுள்ளது.**

**ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்கள் உடனடியாக சவுதி அரசுடன் பேசி, இதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாள் சமத்துவ நாளை யொட்டி குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் கழகத் தோழர்களுடன் இணைந்து திருஉருவச் சிலை மற்றும் திருஉருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றார். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக. அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கர். அவர்களின் பிறந்த நாளையொட்டி சமத்துவ நாள் உறுதிமொழி மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் ஏற்கப்பட்டது. உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி எழிலரசன், மாநகர செயலாளர். சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் ஆறுமுகம். மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### தமிழ்நாட்டின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக

# அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆலோசனைக் கூட்டம்!

**நாளை – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!**

**சென்னை, ஏப்.14**

**தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு வருமாறு:–**



**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.04. 2025 அன்று மாலை சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.**

**இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

---

### மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் ‘அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்’!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, ஏப். 15 -*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19 வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” 16-04-25 முதல் 28-04-25 வரை நடைபெறும் இடங்களின் விவரம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு*

*கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு அறிவித்துள்ளார்.*

**நாள் 16.4.25 புதன்கிழமை 56வது நாள் திரு.வி.க நகர் தெற்கு பகுதி** *1) 76 வட்டம் செல்லப்பா தெரு பிள்ளையார் கோயில் திருவிக தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் எஸ்.சசிகுமார் 2) 75 வட்டம் எஸ்.எஸ் புரம் பி.பிளாக் மெயின் தெரு எல்லையம்மன் கோயில் அருகில், விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் இரா.வீரமணி*

**நாள் 17.4.25 வியாழக்கிழமை 57வது நாள் எழும்பூர் வடக்கு பகுதி** *1) வட்டம் 78 - மூக்குத் தெரு கொசப்பேட்டை, வட்ட செயலாளர் சு.மனோகர் எழு ம்பூர் தெற்கு பகுதி , 2) வட்டம் 58 நேவல் மருத்துவமனை சாலை, பெரியமேடு, வட்ட செயலாளர் வி.விஜயகுமார்.*

**நாள் 18.4.25 வெள்ளிக்கிழமை 58 வது நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி** *1) வட்டம் 96*



*ஆனந்த விநாயகர் கோயில் மெயின் தெரு, வட்ட செயலாளர் எ.வேதா. 2) வட்டம் 98 ஆ N.M.k தெரு, வட்ட செயலாளர் காஞ்சி செ.துரை*

**நாள் 19.4.25 சனிக்கிழமை 59 ஆவது நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி** *1)வட்டம் 84 ஆ கங்கை அம்மன் கோயில் தெரு (green cinema அருகில்) கொரட்டூர், வட்ட செயலாளர் த.வ.லால் 2)வட்டம் 84 கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் மு.விஜய குமார்*

**நாள் 20.4.25 ஞாயிற்றுக்கிழமை 60 வது நாள் துறைமுகம் கிழக்கு பகுதி** *1) வட்டம் 60 குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, கந்தப்ப செட்டி தெரு, வட்ட செயலாளர் க.கவியரசு துறைமுகம் மேற்கு பகுதி 2) தங்கசாலை தெரு, சரவணமுதலி தெரு சந்திப்பு, மாவட்ட பிரதிநிதி ஜி.மாசிலாமணி*

**நாள் 21.4.25 திங்கட்கிழமை 61வது நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி** *1) வட்டம் 67 கோமதி அம்மன் கோயில் தெரு ஜார்ஜ் காலனி, திரு.வி.க நகர், வட்ட செயலாளர் ஜார்ஜ் குமார் , 2) வட்டம் 67 அ தில்லைநாயகம் தெரு, கான் சிக்கன் அருகில் வட்ட செயலாளர் பொன்முடி*

**நாள் 22.4.25 செவ்வாய்க் கிழமை 62 வது நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி** *1)வட்டம் 104 தங்கம் காலனி அண்ணா நகர் மேற்கு, வட்ட செயலாளர் சோ.முருகேசன் 2)வட்டம் 104 அ டி.வி நகர் திருமங்கலம், வட்ட செயலாளர் ப.லோகு பாபு*

**நாள் 23.4.25 புதன்கிழமை 63 வது நாள் கொளத்தூர் மேற்கு பகுதி** *1)வட்டம் 64 அ 42வது தெரு G.K.M காலனி, வட்ட செயலாளர் M.D தமிழ்செல்வன் 2) வட்டம் 64 மக்காராம் தோட்டம், வட்ட செயலாளர் S.முருகன்*

**நாள் 24.4.25 வியாழக்கிழமை 64வது நாள் எழும்பூர் வடக்கு பகுதி** *1)வட்டம் 99 அ புதிய பூபதி நகர் சேத்துப்பட்டு வட்ட செயலாளர் சி.சேகர்*

*எழும்பூர் தெற்கு பகுதி வட்டம் 108 வெங்கடாசலம் தெரு, முருகன் கோவில் அருகில், வட்ட செயலாளர் வான்மதி கதிரவன்*

**நாள் 25.4.25 வெள்ளிக்கிழமை 65 ஆவது நாள் திரு.வி.க வடக்கு பகுதி** *1)வட்டம் 74 அ சந்திர யோகி சமாதி சாலை அம்பேத்கர் பூங்கா அருகில், ஓட்டேரி. வட்ட செயலாளர் G.கிருஷ்ண குமார் 2) வட்டம் 71 வடிவேலு தெரு வெள்ளையன் மார்க்கெட் அருகில், பெரம்பூர். வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு*

**நாள் 26.4.25 சனிக்கிழமை - 66 வது நாள் அம்பத்தூர் தெற்கு பகுதி** *1) வட்டம் 88 கலைவாணர் நகர் மெயின் ரோடு, கழக அலுவலகம் அருகில் வட்ட செயலாளர் சீனிவாசன் 2)வட்டம் 87 அம்மன் கோயில் தெரு பாடி வட்ட செயலாளர் த.பிரகாஷ் குமார்*

**நாள் 27.4.25 ஞாயிற்றுக்கிழமை 67 வது நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி** *1) வட்டம் 79 அ வெங்கடேஸ்வரா நகர் ஏரிக்கரை சாலை வாட்டர் டேக்ஸ் அருகில் வட்ட செயலாளர் பு.வீரராகவன், 2) வட்டம் 79 அராம் நகர் ரெட்டில்ஸ் ரோடு ராக்கி திரையரங்கம் அருகில் வட்ட செயலாளர் பு.வீரராகவன்*

**நாள் 28.4.25 திங்கட்கிழமை 68 வது நாள் 1)துறைமுகம் கிழக்கு பகுதி** *வட்டம் 60அ அன்னை சத்யா நகர், ஏ.பி பகுதி, உணவு விநியோக கடை அருகில் வட்ட செயலாளர் ஆ.நா.பார்த்திபன் 2)துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54ஆ - அம்மன் கோயில் தெரு, சுந்தரம் முதலி தெரு சந்திப்பு, வட்ட செயலாளர்.ஆர்.ரவிச்சந்திரன்*

*மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.*